## சென்னை–6, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்

### பிறப்பிப்பவர்: திரு. இரா.கு. ரவிசங்கர், பி.எஸ்ஸி, எம்.எல்., டி.பி.எம்.,

### சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு. மா. கௌரிசங்கர், இளநிலை உதவியாளர், தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை – 21.08.2019 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை – ஆணை – வெளியிடல்.

ஜி3/976/2021 நாள்.26.08.2021.

படிக்கப்பட்டது

1. சென்னை, தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண் ஜி3/36183/2016, நாள்: 13.08.2019.
2. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள். 26.02.2021.
3. அரசுக் கடித எண். 7681/இ2/2021–2, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள். 14.07.2021.

******

**ஆணை :**

மேலே 1ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகள் மூலம், திரு. எம். மாணிக்கம் என்பவர் நாமக்கல் தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றிய போது 20.04.2005 அன்று மரணமடைந்ததமையால், அவரது வாரிசுதாரரான திரு. மா. கௌரிசங்கர் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு 21.08.2019 அன்று முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்திட வரையறுக்கப்பட்ட வழிமுறைகளின்படியும், மேலே 3ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறும், திரு. மா. கௌரிசங்கர், இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை செய்வது தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| இறந்த பணியாளரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம் | திரு. எம். மாணிக்கம்,<br>உதவியாளர்,<br>தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம்,<br>நாமக்கல். |
| இறந்த பணியாளரின் பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் | 25.06.1984 மு.ப |
| அரசுப் பணியாளர் இறந்த தேதி | 20.04.2005 |
| கருணை அடிப்படையில் பணி கோரும் விண்ணப்பத்தாரரின் பெயர் மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் | திரு. மா. கௌரிசங்கர்,<br>27.03.2006 மற்றும் 18.06.2007. |
| விண்ணப்பம் மூன்றாண்டு காலத்திற்குள் பெறப்பட்டுள்ளதா | ஆம் |
| விண்ணப்ப நாளில் கல்வி / வயது தகுதி பெற்றுள்ளாரா | இல்லை<br>(அரசாணை (2டி) எண்.99, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (இ2) துறை நாள்.14.11.2018–ன் படி விதி தளர்வு செய்யப்பட்டுள்ளது) |

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| | வயது – 14 வருடங்கள் (18.06.2007–ன் படி)<br>கல்வி – 9ம் வகுப்பு<br>(10ம் வகுப்பு தேர்ச்சி– மார்ச் 2008) | | |
| மாற்று விண்ணப்பதாரரா / ஆம் எனில் விண்ணப்ப பெறப்பட்ட நாள் | இல்லை | | |
| பணியில் சேர்ந்த நாள் | 21.08.2019 முற்பகல் | | |
| விதித் தளர்வு / விலக்கு கோரும் இனங்கள் | வயது | கல்வி | விலக்கு கோரும் அரசாணை விபரம் |
| | இல்லை | இல்லை | இல்லை |

மேற்படி தனியர் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்று 21.08.2019 அன்று முற்பகல் பணியில் சேர்ந்த போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20ல் தெரிவித்தவாறு அரசுப் பணியாளர் சேருவதற்கு முன்னர், குற்ற பதிவுகள் ஏதுமில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையில் கூறப்பட்டுள்ளபடி எந்த விதித்தளர்வோ / விலக்கோ அரசிடம் பெற வேண்டிய நிலை எழாததால், தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 21.08.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்தும், பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், அக்காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அன்னாரின் பணி, முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி, பெறத் தகுதியுடையவராகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./– XXX
கூடுதல் தொழிலாளர் ஆணையர்
(நிர்வாகம்)

பெறுநர்
திரு. மா. கௌரிசங்கர்,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை.

நகல்
1. இப்பிரிவு ஜி4 இருக்கை.
2. பணிப்பதிவேடு / உதிரி.

// அனுப்பப்படுகிறது //

31.8.21
கூடுதல் தொழிலாளர் ஆணையருக்காக
(நிர்வாகம்)

Scanned with CamScanner